# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலம் 3 ஆம் ஞாயிறு | 19 ஏப்ரல் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: சமூகம் – இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்



## குழப்பமடைந்தவர்களுடன் நடப்பது துணையுடன் நம்பிக்கை வளர்கிறது

எம்மாவுசுக்குப் பயணம் சென்ற சீடர்கள் கலகக்காரர்கள் அல்ல. அவர்கள் ஏமாற்றமடைந்திருந்தனர். குழப்பம் மற்றும் சோர்வுற்றிருந்தனர். இயேசு அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. அவர்களுடன் வழிநடந்தார்.

கற்பிப்பதற்குமுன் அவர்களின் குரலுக்கு செவிமடுக்கிறார். சவால் விடுவதற்குமுன் விளக்கமளிக்கிறார். தம்மை வெளிப்படுத்துவதற்குமுன் அப்பத்தை பிட்கிறார்.

இதுதான் ஆயர்மாமன்றத்தின் இதயம்: கடவுள் தம் மக்களுடன் அவர்களின் வேகத்திற்கு ஈடுகொடுத்து நடக்கிறார்.

திருத்தூதர் பணிகள் நூலில் பேதுருவின் உரை நமக்கு இதுபோன்ற ஒன்றைக் காட்டுகிறது. மக்கள் என்ன செய்யவேண்டும் என்று மட்டும் சொல்லாமல், மீட்பின் கதையைப் புரிந்துகொள்ள உதவும்போது நம்பிக்கை வளர்கிறது.

இன்றைய நமது இளைஞர்கள் பல எம்மாவுஸ் சாலையில் பயணிக்கின்றனர். நம்பிக்கையைக் கேள்வி கேட்கிறார்கள். தங்களுக்கான அடையாளத்துடன் போராடுகிறார்கள். எண்ணியல் கலாச்சாரத்தை வழிநடத்துதல், மற்றும் வெளியே சொல்லாத காயங்கள் ஆகிய சாலைகளில் பயணிக்கின்றனர்.

MCYD ஒன்றுகூடலில் இளைஞர்கள் இதைத் தெளிவாக வெளிப்படுத்தினர். எங்களுக்கு நிறைவான தலைவர்கள் தேவையில்லை. எங்களோடுப் பயணிக்கவும், செவிமடுக்கவும், பொறுமையோடுப் பயணிக்கும் மூத்தவர்கள் எங்களுக்குத் தேவை என்று கூறினார்கள். (MCYD தொகுப்பு, துணை & வழிகாட்டுதல்)

இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் என்பது பொறுப்பை மிக விரைவாக ஒப்படைப்பது பற்றியது அல்ல. இது இணைந்து நடப்பது, உருவாக்குவது, வழிநடத்துவது மற்றும் படிப்படியாக நம்பகத்தன்மை ஆகியவை.

இறைவாக்குரைக்கும் திருஅவை கேள்வி கேட்பதை ஒருபோதும் அழிக்காது. ஆயர்மாமன்ற திருஅவை தனித்து நடப்பதை முற்றிலுமாக மறுக்கிறது.

இளைஞர்கள் தங்களுடன் ஒருவர் இணைந்துப் பயணிப்பதை உணரும்போது, அவர்கள் இதயங்கள் மீண்டும் நம்பிக்கையுடனும் ஒரு நோக்கத்துடனும் மீண்டும் பற்றியெறியத் தொடங்கும்.

எம்மாவுஸ் சீடர்களைப் போல அவர்கள் எழுந்து திரும்பி வருவார்கள். இது கட்டாயத்தினால் அல்ல. மாறாக கிறிஸ்துவால் அவரது மக்கள் மூலம் சந்திக்கப்பட்டதினால் திரும்பி வருவார்கள். ✣

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர் பணிகள் 2: 14, 22-23
திருப்பாடல் 16: 1-2, 5, 7-11
1 பேதுரு 1: 17-21
யோவான் 24: 13-35

நீங்கள் ஒருபோதும் தனித்து இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் கிறிஸ்து உங்கள் பயணத்தில் உங்களுடன் பயணிக்கிறார்.

– புனித 2 ஆம் ஜோன் போல்

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org